www.tamilarangam.net

# தமிழீழ மக்களே! தமிழீழ வியாபாரிகளே!

*எங்கள் மண்ணில் வாழும் எங்கள் சொந்தங்களைப் பற்றி*

**இனியும் சிந்திக்காமல் இருக்கலாமா?**

*வீடற்றவர்களாக்கி, நாடற்றவர்களாக்கி, அகதிகளாக ஓட ஓட விரட்டி, தஞ்சம் புகுந்த ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் எங்களிடமே*

**பல கோடி ருபாய்களை ஸ்ரீலங்கா அரசு கொள்ளையடிக்கிறது!**

*எங்கள் இனத்தை தொடர்ந்து அழித்துக் கொண்டிருக்கும் வெறிபிடித்த ஸ்ரீலங்கா அரசுக்கு எங்களுக்குத் தெரியாமலேயே*

**அன்றாடம் நாம் உதவிக் கொண்டிருக்கிறோம்!**

*அன்றாடம் எங்கள் இனத்தையே கொன்று குவித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கு வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் தொடர்ந்து துணை போவதா?*

*சொல்லொணாத்துயரங்களோடு, 'வாழ்வா? சாவா?' என்று*

*உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் நமது உறவுகள்-*

*உயிரற்ற உடல்கள், உடைபட்ட வீடுகள், உதிரத்தின் ஆறுகள்...*

**எரிக்கின்ற எங்கள் தேசம்!**

*இன்னுமா உங்கள் தசை ஆடவில்லை?*

*ஸ்ரீலங்காவிலிருந்து இறக்குமதி செய்து விற்பனையாகும்*

**அனைத்துப் பொருட்களையும் பகிஷ்கரியுங்கள்!**

*அங்கிருந்து வரும் குளிர்பானங்கள், மதுபானங்கள், பால் உணவுகள் போன்ற பொருட்கள் நமக்குத் தேவையா? நாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இவை இல்லாதவையுமல்ல! இந்த உணவுப் பொருட்களை , வேறு எந்த நாடுகளிலிருந்தோ பெறுவதன் மூலம் அது*

**எந்த வகையிலும் எம்மைப் பாதிக்கப் போவதில்லை!**

*மாற்று இல்லாத பட்சத்தில் ஒன்றிரண்டு பொருட்களை விற்பதோ, வாங்குவதோ தவறு என்று சொல்லவில்லை. ஆனால் ஸ்ரீலங்காவிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் பல கோடி ரூபாய்களை ஸ்ரீலங்கா அரசுக்கு அந்நிய செலாவணியாக அள்ளிக் கொடுத்து, அவை பாதுகாப்பு செலவீனங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு, நம் உறவுகளை அழித்து ஒழிக்கும் இன வெறி க்கு உதவுகிறது என்பதை*

**ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்!**

*அமெரிக்காவை எதிரியாக கருதும் முஸ்லிம் நாடுகள், 'கொக்கோ கோலோ'வை இறக்குமதி செய்வதில்லை! ஏன்? அதுதான் இனப் பற்று!*

*அது நமக்கு இல்லாமல் போகலாமா?*

*எம் மக்களை அழிக்கும் இனவெறி அரசுக்கு நல்ல பாடம் புகட்ட, எம் மண்ணை மீட்கும் போராட்டத்தில் நாமும் பங்கு கொள்ள*

**ஸ்ரீலங்கா இறக்குமதிப் பொருட்களைப் பகிஷ்கரிப்போம்!**

*இதன் மூலம் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் உறுதியான நிலையை ஸ்ரீலங்கா அரசுக்கு உணர்த்துவோம்!*

**எங்கள் உறவுகளைக் காக்க இப்படி ஒரு சபதம் ஏற்போம்!**

ஸ்ரீலங்கா பொருட்கள்
பகிஸ்கரிப்புக் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்